[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated 27th September 1956 received from the Governor of Madras :—

"In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Registration of Practitioners of Integrated Medicine Bill, 1956."

III.—STATEMENT UNDER RULE 40 *RE* FORCIBLE RECOVERY OF SHORT-TERM MANURE LOANS FROM RYOTS OF SATANKULAM AREA.

MR. SPEAKER : I have received notice under Rule 40 from hon. Member Sri M. S. Selvarajan calling attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, viz., forcible recovery of short-term manure loans from the ryots of Satankulam area.

*** SRI M. S. SELVARAJAN :** கனம் சபாநாயகர் அவர்களே, தேசத்தில் பல்வேறு ராஜ்யங்களிலும், இந்த ராஜ்யத்தில் பெரும் பகுதியிலும் எல்லையில்லாத மழை காரணமாக தொல்லை நிலை ஏற்பட்டிருப்பினும், சில பகுதிகளில் நீடித்த வறட்சி நிலவிவருகிறது பிரத்யட்ச நிலை. இல்லாமை நிலைக்கு இலக்காயிருக்கக்கூடிய துர்பாக்கியமான 400 கிராமங்களைக் கொண்டது சாத்தான்குளம் தொகுதி. அப்பகுதி மக்களின் வாழ்க்கைக்கு ஒரே ஆதாரமாக இருந்த பனைகள் லட்சக்கணக்கில் பட்டுப்போன நிலையில், ஜீவாதாரத்திற்காக, ஏதேனும் பயிர்த்தொழில் செய்து பிழைப்பதற்காக, அங்குள்ள மக்கள் கிணற்று இறைப்பைக் கொண்டு பல பகுதிகளில் குறுகிய காலத் தோட்டப் பயிர் நஞ்சை, புஞ்சைப் பயிர்களெல்லாம் செய்வதற்கு முயற்சித்து இருக்கிறார்கள். அந்த நிலையில் அவர்களுக்குக் குறுகிய காலக் கடன் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. குடி தண்ணீருக்கே சுமார் 100 அடியிலிருந்து 180 அடி வரையிலும் ஆழமாகக் கிணறுகள் தோண்டினாலுங்கூட, தண்ணீர் கிடைக்காத நிலையில், அவர்களுடைய முயற்சி தக்க விதமாகப் பயன் அளிக்காத நிலையில், பயிர் ஒருக்கால் பட்டுப்போயிருக்கிறது அல்லது தகுந்த மகசூல் கிடைக்காமல் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமலிருக்கிறது. அப்பகுதியிலுள்ள கஷ்ட நிலையை உத்தேசித்து, "பஞ்சப் பிரதேசம்" என பிரகடனம் செய்யப்பட்டிருந்தால் இயல்பாகவே கடன்களெல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கும். ஆனால், ஓரளவுக்கு பஞ்சப் பகுதி அதாவது **low scale famine** என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் இம்மாதிரி குறுகிய காலக் கடன் ஒத்திவைக்கக் கூடிய அதிகாரம் ஜில்லா அதிகாரிகளுக்கு இல்லாததாலும் அரசாங்கத்தின் ஈடுபாடும் தலையீடும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய கஷ்டம் ஒருபுறமிருக்க, அரசாங்கம் சட்டப்படி அவர்களிடமிருந்து கடன் தொகையை வசூலிப்பதற்கு முயற்சிக்கக்கூடிய நிலை அங்கே நிலவுகிறது. ஆகவே, உடனடியாக அரசாங்கம் அங்கு இருக்கக்கூடிய நிலையில் உரிய கண்ணோட்டம் செலுத்தி கஷ்டத்திற்குப் பரிகாரம் செய்ய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான், இம்மாதிரி பிரேரேபணை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கடன்களை குறைந்த பட்சம் அடுத்த மகசூல் வரையிலாவது ஒத்திவைத்து உதவி செய்யவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.